Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 2, Special Issue - 1, November 2022 **E-ISSN: 2583-0481**

A Study on Metaphor as the Mother of all Figures of Speech

R. Aruna, PhD. Scholar of Tamil, PKR Arts College for Women, Gobichettipalayam, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0003-1090-9704
DOI: 10.5281/zenodo.7312373

Abstract

Figures of Speech illustrates the nature of the subject. It induces the imaginative and aesthetic sense of the literary work, particularly poetry. Simile is one of the figures of speech and has been used in a literary work to convey the meaning by suitable an analogy. Tolkappiyar realized the excellence of the metaphorical group from clarifying the grammar of metaphor in the section entitled 'Ani' Metaphor. Therefore, this article explores the metaphorical matrix as the mother of matrix grammar.

Keywords: Figurative Grammar, Metaphor, Figurative Figures.

References

[1] Dr. Ira. Kannan. *Ani Ilakkana Varalaru*. Couthan Publishing House, Chennai - 600055, First Edition- November 2003.
[2] *Maranalankaram, Mahataniyalurai*. Tamil Sangha Muttra Road Edition, 1929.
[3] *Ilakkana Vilakkam, Aniyuyal.* Saraswati Mahal Edition-1973.
[4] Dr. R. Srinivasan. *Ilakkiathil Vuvamaigal.* Harsha Book House, Chennai - 600033, First Edition-2012.
[5] S.V. Sanmugam. *Solilakkana Kotpadu, Tolkappiyam - Part One*. World Tamil Research Institute, Chennai - 600113. First Edition - 1984, Reprint -2008.
[6] Professor Dr. K. Mohanarasu. *Archaeological research clarifications*. Manivasakar Publishing, Chennai - 600108, First Edition-August 2016.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: NIL.
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

அணி இலக்கணத்தின் தாய் உவமை அணி - ஓர்ஆய்வு

இரா. அருணா, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,

. கே. ஆர். மகளிர் கலைக் கல்லூரி, கோபிசெட்டிபாளையம், தமிழ்நாடு, இந்தியா.

ORCiD: https://orcid.org/0000-0003-1090-9704

DOI: 10.5281/zenodo.7312373

ஆய்வுச் சுருக்கம்

உவமை என்பது பொருளின் தன்மையைப் புலப்படுத்துவது என்பதாகும். அதாவது, உவமை என்பது பொருளைத் தக்க ஒப்புமை கொண்டு உணர்த்துவதாகும். தொல்காப்பியர் தம் பொருளதிகாரத்தில் உவமை இயல் என்ற பகுதியில் உவமையின் இலக்கணத்தைத் தெளிவுபடுத்துவதிலிருந்து உவமை அணியின் சிறப்பை உணர்ந்து கொள்ள முடிகிறது. எனவே, அணி இலக்கணத்தின் தாய் உவமை அணி என்பதை ஆராய்வதை இக்கட்டுரையில் காண்போம்.

குறிப்புச் சொற்கள்: அணி இலக்கணம், உவமை அணி, *தொல்காப்பியம்*, உவமை உருபுகள், உருவகம்.

முன்னுரை

உவமை என்பது பொருளின் தன்மையைப் புலப்படுத்துவது என்பதாகும். அதாவது, உவமை என்பது பொருளைத் தக்க ஒப்புமை கொண்டு உணர்த்துவதாகும். தொல்காப்பியர் தம் பொருளதிகாரத்தில் உவமை இயல் என்ற பகுதியில் உவமையின் இலக்கணத்தைத் தெளிவுபடுத்துவதிலிருந்து உவமை அணியின் சிறப்பை உணர்ந்து கொள்ள முடிகிறது. எனவே, அணி இலக்கணத்தின் தாய் உவமை அணி என்பதை ஆராய்வதை இக்கட்டுரையில் காண்போம். தமிழிலக்கணம் தொடக்கத்தில் எழுத்து சொல் பொருளென மூன்றாய் இருந்து பிற்காலத்தில் யாப்பொடு நான்காகக் கிளைத்துப் பின்னர் அணியினை இணைத்துக் கொண்டு ஐந்தாக வளர்ந்தது. இன்று முழுமையாக வழங்கப் பெறும் இலக்கண நூல்களில் அணியை ஓர் அதிகாரமாகக் கொண்டு இலக்கணம் கூறும் பழைய நூல்கள் தொல்காப்பியமும் வீரசோழியமும் எனலாம். தொல்காப்பிய உவம இயல் உவம அணியை நன்கு விளக்குகிறது. அந்நூல் பிற்கால அணிநூலோர் தனித்தனி அணிகளாகக் காட்டும் உவமை, உள்ளுறை, இறைச்சி முதலானவற்றை விளக்கியுள்ளது. இதில் ஒன்றான உவமை அணி குறித்து நோக்குவோம்.

உவமையும் பொருளும்

ஒரு பொருளுக்குப் பல ஒப்புமைகள் இருப்பினும் அந்த ஒப்புமைகள் பலவற்றுள்ளும் எந்த உவமை பொதுத் தன்மையால் மிகச் சிறந்து விளங்குகிறதோ அதனையே உவமையாக்க

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

வேண்டும். உவமை அமைப்பில், உயர்ந்த தன்மையைப் பொதுத் தன்மை ஆக்குங்கால், பொருளின் உயர்ந்த தன்மையினும் உவமையின் தன்மை உயர்ந்ததாகவும் அத்தன்மையைக் கொண்ட பலவற்றுள்ளும் உவமைக்குக் கொள்ளப்படுவதே உயர்ந்ததாகவும் விளங்க வேண்டும்.

உவமையும் பொருளும் பருப்பொருள்களாக அமைதல்

- முதற்பொருளுக்கு முதற்பொருளும்,
- முதற்பொருளுக்குச் சினைப்பொருளும்,
- சினைப் பொருளுக்குச் சினைப்பொருளும்,
- சினைப் பொருளுக்கு முதற்பொருளும் ஆகியவை அனைத்தும் உவமைகளாக அமையலாம். ஆனால், அவையும் மரபுவழி வந்தனவாக அமைவது முக்கியம் ஆகும்.

உவமையின் பொருள் புலப்பாட்டு நெறி

- அணி என்றால் முடி தொடி என்பது போல் அணிபவரும் அணியும் என வேறுபடும். செய்யுளில் வரும் அணி செய்யுளில் வேறுபட்டதன்று. எனவே, இவற்றை அணி என்ற பெயரால் சுட்டாமல், பொருள் உறுப்பு உறுப்பு என்ற பெயராலேயே குறிக்க வேண்டும்.
- உவமையைப் பொருள் புலப்பாட்டு நெறியாக மட்டுமே கொள்கின்றார் பேராசிரியர். இளம்பூரணர் உவமையை அணியாகவும் கொள்கின்றார்.
- உவமையியலிலும் செய்யுளியலிலும் சொல்லதிகாரத்திலும் கூறப்படுகின்ற சில கருத்துகளைப் பிற்காலத்து ஆசிரியர்கள் அணியெனக் கொண்டு விளக்கியுள்ளார்கள்.
- பொருளதிகாரத்தில் கூறப்படும் பொருட் பகுதிகள் எல்லாம் செய்யுட்கு அணியே ஆகும். அவற்றுள் ஒரு சிலவற்றை மட்டுமே அணியெனக் கூறுதல் பொருந்தாது.

உவமை அணியில் உருவக அமைப்புகளின் வகைகள்

1. ஒரே ஒரு பொருளுக்கு ஒரே ஒரு உருவகம் அமைத்தல், இதனைத் தனிநிலை உருவகம் எனக் கூறலாம்.
2. உருவகங்களுள் தொடர்ச்சி கண்டு அவற்றை இணைத்து ஒரு முழுமைக் காட்சியாக அமைக்கலாம். இதனை முற்று உருவகம் என்று கூறலாம்.
3. உருவகங்களை மட்டும் கூறிப் பொருள்களைக் கூறாமல் விடுதல் என்பதற்குப் பல சான்றுகள் கிடைக்கின்றன. இவற்றை ஒரு சார் உருவகம் என்று கூறலாம்.

உருவகங்கள் தேய்ந்து பயில்வுச் சொற்களாக வழங்குதல் காணப்படுகிறது. இதனைத் தேய்ந்த உருவகம் என்று கூறலாம். இந் நால்வகை அமைப்புகளில் உருவகங்களை ஆராய முடிகிறது.

கவிதையின் அணிவேர் உவமை அணி

தானுற்ற உணர்வான் தன் மனமடைந்த விகாரங்களைச் சொற்களாகிய ஊடகத்தின் வழி நுகர்வோனின் மனத்தின் கண்ணும் உருவாக்க வேண்டிய பெரும்பணி கவிதைப் படைக்கும் புலவனுக்கு உண்டு. இத்தகு பெரும்பணியை இலகுவானதாக மாற்றி புலவனுக்குப் பயன்படும் கருவியே உவமை அணி ஆகும். உவமை அணியின் துணையால் தன் மன

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

விகாரங்களைப் புலவனால் எளிதே வெளிப்படுத்த முடிகிறது. எனவே கவிதையில் உவமை அணி இன்றியமையாத ஓர் உறுப்பாக அமைகிறது.

உவமை அணியில் உவமை உருபுகளின் பங்கு

உவமையையும் பொருளையும் இணைக்கும் சொற்கள் உவம உருபுகள் எனப்பட்டன. அவை முழுச் சொற்களாகவும், தனி உருபுகளாகவும் விளங்கின. இவை உவமையையும் பொருளையும் இணைத்து நின்றன. சில தொடர்களில் இவ்உருபுகள் இல்லாமலேயே அவை இணைந்து நின்றன. அவற்றை உவமைத் தொகைகள் என்பர். எனவே உவம உருபு தொக்கும் தொகாமலும் உவமையும் பொருளும் இயைந்து நின்றன எனலாம். தொக்கு நின்பனவற்றைத் தொகை உவமை என்றும் விரிந்து நிற்பனவற்றை விரி உவமை என்றும் கூறுவர்.

பொருளே உவமம் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பின் அஃது உவமம் ஆகும். (தொல். சூ.284)
கூந்தல் மெல்லணைத் துஞ்சி. - அகம். 308/13
கல்வி என்னும் வல்லாண் சிறா அன், (புறம். 346/3)

இச்செய்யுள்களின் வழி உவமை உருபின் பங்கு பற்றி விளக்கமாக அறிந்து கொள்ள முடிகிறது.

ஆறிலக்கண நூலில் உவமை அணியின் சிறப்பு

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றி இலக்கண நூல்களுள் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் அருளிய அறுவகை இலக்கணம் எனும் நூல் குறிப்பிடத் தக்கதாகும். இந்நூல் எடுத்து, சொல், பொருள், யாப்பு, அணி எனும் மரபு சார்ந்த ஐந்திலக்கணத்தையும் கூறுகிறது. பாயிரம், எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம், பொருளிலக்கணம், யாப்பிலக்கணம், அணியிலக்கணம், புலமையிலக்கணம் எனும் ஆறு பிரிவுகளுடன் எழுநூற்று தொண்ணூறு மூன்று நூற்பாக்களுடன் எழுநூற்று தொண்ணூற்று மூன்று நூற்பாக்களுடன் இந்நூல் அமைக்கப்பட்டுள்ளது. இந்நூற்கண் அணிகளின் வகைகள் காட்டப் பெறவில்லை. உவமை அணியினை மட்டுமே சுட்டி உவமைப் பொருள்களையும் அவற்றிற்குரிய உவமேயப் பொருள்களையும் பட்டியலிட்டுக் காட்டுகிறார். பத்தொன்பதாம் நூற்றாண்டில் உரைநடையில் எழுதப்பெற்ற அணியிலக்க நூலொன்றும் வெளிவந்தது.

தொல்காப்பியத்தில் கூறும் உவமை அணி

உவமை என்பது பொருளைத் தக்க ஒப்புமை கொண்டு உணர்த்துவதாகும். தொல்காப்பியர் தம் பொருளதிகாரத்தில் உவமை இயல் என்னும் பகுதியில் உவமையின் இலக்கணத்தைத் தெளிவுபடுத்துகின்றார். தொல்காப்பியர் கருத்தின்படி உவமை என்பது பொருளின் தன்மையைப் புலப்படுத்துவது என்பதாகும். வினை, பயன், மெய், உரு ஆகிய பொருளின் தன்மைகளை உவமைகள் சிறப்பிக்கின்றன என்பது அவர் தரும் விளக்கமாகும்.

வினைபயன் மெய்உரு என்ற நான்கே
வகைபெற வந்த உவமைத் தோற்றம் (தொல்.சூ272)

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

சங்க இலக்கியத்தில் உவமை அணி

சங்க இலக்கியத்தில் பயில்கின்ற உவமை அணி வகைகள் அகரவரிசையில் அமைத்துத் தனித்தனியாகக் வரிசைப்படுத்திக் காட்டப்பட்டுள்ளது.

1. **அந்தாதித் தொடை உவமை**
2. **இடம் மாற்று உவமை**
3. **இணைப்பு உவமை**
4. **இரட்டை உவமை**
5. **இல்பொருள் உவமை**
6. **எடுத்துக்காட்டு உவமை**
7. **எதிர்மறுப்பு உவமை**
8. **ஐய உவமை**
9. **தடுமாறு உவமை**
10. **தற்குறிப்பேற்ற உவமை**
11. **திரிபு உவமை**
12. **நிந்தை உவமை**
13. **நிரல்நிறை உவமை**
14. **பல்பொருள் உவமை**
15. **பிறிது மொழிதல் அணி**
16. **பொது நீங்கு உவமை**
17. **பொருள் உவமை**
18. **மாலை உவமை**
19. **முரண் உவமை**
20. **முற்று உவமை**
21. **வேற்றுமை உவமை**

இதிலிருந்து சங்க இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள உவமை அணியின் சிறப்பு பற்றி அறிய முடிகிறது.

தொகுப்புரை

- இலக்கணம் கூறும் பழைய நூல்கள் தொல்காப்பியமும் வீரசோழியமும் எனலாம். தொல்காப்பிய உவம இயல் உவம அணியை நன்கு விளக்குகிறது.
- உவமை அணியின் துணையால் தன் மன விகாரங்களைப் புலவனால் எளிதே வெளிப்படுத்த முடிகிறது. எனவே கவிதையில் உவமை அணி இன்றியமையாத ஓர் உறுப்பாக அமைகிறது.

மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

- அறுவகை இலக்கண நூலில் அணிகளின் வகைகள் காட்டப் பெறவில்லை. உவமை அணியினை மட்டுமே சுட்டி உவமைப் பொருள்களையும் அவற்றிற்குரிய உவமேயப் பொருள்களையும் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.
- தொல்காப்பியர் தம் பொருளதிகாரத்தில் உவமை இயல் என்னும் பகுதியில் உவமையின் இலக்கணத்தைத் தெளிவுபடுத்துகின்றார்.
- உவமை அணியில் உவம உருபின் பங்கு, உருவத்தின் பங்கு பற்றியும் இங்கு தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

துணை நூற்பட்டியல்

[1] முனைவர் இரா. கண்ணன். *அணியிலக்கண வரலாறு*. கூத்தன் பதிப்பகம், சென்னை – 600055, முதல் பதிப்பு- நவம்பர் 2003.

[2] *மாறனலங்காரம், பொருளணியலுரை*. தமிழ்ச் சங்க முத்திரா சாலை பதிப்பு, 1929.

[3] *இலக்கண விளக்கம், அணியியல்*. சரசுவதிமகால் பதிப்பு-1973.

[4] டாக்டர் ஆர்.சீனிவாசன். *இலக்கியத்தில் உவமைகள்*. ஹர்ஷா புக் ஹவுஸ், சென்னை - 600033, முதல் பதிப்பு-2012.

[5] செ.வை. சண்முகம். *சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல்பகுதி*. உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை - 600113. முதற்பதிப்பு – 1984, மறுபதிப்பு -2008.

[6] பேராசிரியர் முனைவர் கு. மோகனராசு. *தொல்காப்பிய ஆய்வுத் தெளிவுகள்*. மணிவாசகர் பதிப்பகம், சென்னை - 600108, முதல் பதிப்பு-ஆகஸ்ட் 2016.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.